# <u>கடலூர் பெருநகராட்சி</u>

2020ம் ஆண்டு **மே** மாதம் 29–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 29.05.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

## *பொருட்கள்*

**1)** கடலூர் பெருநகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள 36 எண்ணிக்கை கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் வருடாந்திர பராமரிப்பு பணி ரூ3.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 12.05.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | M/s.Tamizh Systems, Cuddalore | 2.03 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 1.51 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட M/s.Tamizh Systems, Cuddalore என்ற நிறுவனத்தின் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 2.03 % குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான M/s.Tamizh Systems, Cuddalore என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலலம்.

**2)** கடலூர் பெருநகராட்சி ஆண்டுக் குத்தகை இனம் எண் 12 கடலூர் பழைய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக சாலை – பாரதிசாலை சந்திப்பில் உள்ள கட்டணக் கழிவறை மற்றும் குளியலறையில் கட்டணம் வசூலிக்க திரு.ராமலிங்கம் என்பவர் குத்தகை எடுத்துள்ளார். இக்குத்தகைதாரர் மூன்றாம் ஆண்டுக்கு (2020–21) குத்தகை செலுத்தி புதுப்பிக்கப்படவில்லை. மேலும் இக்கழிவறையிலிருந்து கழிவுநீர் வெளியேறவில்லை. மேற்கூரைகள் இல்லை.பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என இக்குத்தகை இனத்தை 2020–21ம் ஆண்டுக்கு தொடர்வது

குறித்து நகராட்சி பொறியாளருக்கு 13.03.2020 அன்று குறிப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சி பொறியாளர் நேராய்வு செய்து மேற்கண்ட கட்டணக் கழிவறை மிக மோசமாக இடிந்து விழும் நிலையில் உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி உடன் இப்பழுதடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்றும், இப்பணி மேற்கொள்ள இவ்வலுவலக ந.க. எண் 3320/2020/ இ1 எண்ணிட்ட 26.03.2020ம் தேதிய கடிதம் வாயிலாக நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது என அதன் நகலை சமர்ப்பித்துள்ளார்.

எனவே 2020–21ம் ஆண்டுக்கு இக்குத்தகை இனத்தை நீக்கம் செய்யலாம். குத்தகைதாரர் செலுத்திய வைப்புத் தொகையில் செலுத்த வேண்டிய குத்தகை தொகை மற்றும் இதரக் கட்டணம் போக மீதம் திரும்ப வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. அ) அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். (10933/2017/அ2)

3) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம் பகுதி வார்டு எண் 8 பெண்ணையாற்று இடுகாட்டு பகுதியில் உள்ள எரிவாயு தகனமேடையினை தனியார் மூலம் ஓராண்டு காலத்திற்கு இயக்கி பராமரித்தல் பணி ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 11.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | M.s.M.H.T Engineering, Chennai | ரூ.9,33,000/– விலைவிகிதம் (0.06% மதிப்பீட்டை விட குறைவு.) |
| 2. | M.s, YES YES JEE Engineering, Chennai | ரூ.9,77,800/– விலைவிகிதம் (4.73% மதிப்பீட்டை விட அதிகம்.) |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ. எண் 1ல் கண்ட M.s.M.H.T.Engineering, Chennai என்ற நிறுவனம் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 0.06 % குறைவு) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான M.s.M.H.T.Engineering, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

4) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 22 எண்ணிக்கை நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் உள்ள கழிப்பறை மற்றும் பள்ளி வளாகங்களை சுத்தப்படுத்தும் பணிக்கு 22 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் பணி அமர்த்திடும் பணி, ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 12.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.25% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | மெஸர்ஸ்.மேன்பவர் சப்ளை, சேலம் | 33.92% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | மெஸர்ஸ்.சரன் என்விரோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் | 93.67% மதிப்பீட்டை விட குறைவு |
| 4 | மெஸர்ஸ் கிளின் கேர் சர்வீஸ் | 33.92% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட 4 ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 3ல் கண்டுள்ள மெஸர்ஸ்.சரன் என்விரோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரால் டேவணித்தொகை செலுத்தாததால் நிராகரிக்கப்பட்டது. தகுதியுள்ள 3 ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட அதிகமாக வழங்கியுள்ளனர். இவற்றில் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 0.25 % மதிப்பீட்டை விட அதிகம்) அளித்துள்ள வரிசை எண் 1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்பவரிடம் விலைகுறைப்பு செய்ய கோரியதன் பேரில் கீழ்க்கண்டவாறு விலைகுறைப்பு செய்து சம்மதம் அளித்துள்ளார்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | மதிப்பீட்டு விலை விகிதம் |

எனவே மேற்படி திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

5) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட 7 எண்ணிக்கை அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறை மற்றும் பள்ளி வளாகங்களை சுத்தப்படுத்தும் பணிக்கு 16 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் பணி அமர்த்திடும் பணி, ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 12.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.25% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | மெஸர்ஸ்.மேன்பவர் சப்ளை, சேலம் | 33.92% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | மெஸர்ஸ் கிளின் கேர் சர்வீஸ் | 3.80 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியுள்ள 3 ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட அதிகமாக வழங்கியுள்ளனர். இவற்றில் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 0.25 % மதிப்பீட்டை விட அதிகம்) அளித்துள்ள வரிசை எண் 1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்பவரிடம் விலைகுறைப்பு செய்ய கோரியதன் பேரில் கீழ்க்கண்டவாறு விலைகுறைப்பு செய்து சம்மதம் அளித்துள்ளார்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | மதிப்பீட்டு விலை விகிதம் |

எனவே மேற்படி திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

6) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம் பகுதி வார்டு எண் 8, பெண்ணையாற்று இடுகாடு பகுதியில் கடந்த 10 ஆண்டுக்கு முன்பாக கட்டப்பட்ட எரிவாயு தகனமேடை இயந்திரம் பழுதடைந்த நிலையில் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. முக்கிய இடுகாடான இதனை இப்பகுதி மக்கள் பயனற்ற முறையில் இருந்ததால், திறந்த வெளியில் பிரேதங்களை எரித்து வருகின்றனர். இதுகுறித்து பொதுநல இயக்கத்தினை சேர்ந்தவர்கள் இவ்வெரிவாயு தகன மேடையினை பழுது நீக்கம் செய்யவும், பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியும், பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். இதுகுறித்து, தினசரி நாளிதழ்களிலும் செய்திகள் வெளியானதால் மாவட்ட ஆட்சியர் அவர்களும் நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தியதன் பேரில், இத்தகன மேடை

| | |
|---|---|
| | சீர்செய்யும் பணி நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. இந்த எரிவாயு தகனமேடையினை தனியார் மூலம் ஓராண்டு காலத்திற்கு இயக்கி பராமரித்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50.000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) க்கு நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர்/ ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 7) | கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 1 முதல் 45 வார்டு வரை உள்ள புதை வடிகால் திட்டத்திற்கான நீரேற்று நிலையம் மற்றும் உந்து நிலைய கிணறுகளில் இயங்கி வரும் நீர் மூழ்கி மோட்டார்கள் (Non- Clog Pumpset) பழுதடைந்து விட்டால் கழிவுநீர் உந்தப்படாமல், பொதுமக்களின் வீடுகளுக்கும், பாதாள சாக்கடை ஆட்குழிகளில் இருந்து, வழிந்தோடி பொது சுகாதாரத்தினை பாதிக்கின்றது. எனவே, பொதுமக்கள் நலன் கருதியும், பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதியும் இம்மோட்டார்களை பழுது நீக்கம் செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 8) | கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 1 முதல் 45 வார்டு வரை அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மானக் குழாய், பிரதான குழாய் மற்றும் வால்வுகள் , திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையம் ,சாவடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கேப்பர்மலை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்திட நகராட்சி வசம் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை தனியார் மூலம் பராமரிப்பு பணி செய்து வரப்படுகிறது. தற்போது இப்பராமரிப்பு பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதியும், இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொார்ந்தமைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 9) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வன்னியர்பாளையம்– தேவனாம்பட்டினம் சாலையில், கே.கே.நகர் நீர்ஏற்றும் நிலையத்திற்கு செல்லும் பிரதான குழாய் உடைந்துவிட்டபடியால், அதனை சரிசெய்ய 450mm D.I.49 பாதாள சாக்கடை குழாயினை மாற்றவும், கடலூர் துறைமுகம் சாலையில் உள்ள மருத்துவமனை அருகில் சுமார் 160mm உள்ள பிரதான சாக்கடை கழிவுநீர் குழாய் உடைந்து கழிவுநீர் செல்ல முடியாமல், பொதுமக்களுக்கு சுகாதார கேடு விளைவிப்பதால் 10 மீட்டர் நீளத்திற்கு புதியதாக மாற்றம் செய்யவும், மேலும் புதுப்பாளையம் இரட்டை பிள்ளையார் கோயில் தெருவின் சந்திப்பில் பாதாள சாக்கடை கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டு குழாய் உடைந்துள்ளதால், அங்கும் சுமார் 6.00 மீட்டர் நீளத்திற்கு 250 mm UPVC Pipe ஆகியவற்றை மாற்றி அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4.10 இலட்சத்திற்கு |

மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

10) கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் வழங்கும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பகுதியில் குடிநீர் வெளியேற்றும் 400 mm C.I. sluice valve மிகவும் பழுதடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இது பழைய வகையை சேர்ந்த மூடி திறப்பான் என்பதால் இவ்வகை வால்வுகள் உள்ள வியாபார நிறுவனங்களில் இல்லாததால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து இவ்வகை புதிய வால்வினை பெற்றும் அவ்வால்வுகளுக்குரிய கூடுதலாக DI குழாய்கள், Scour valve மற்றும் இதர பொருட்களை பொருத்த (புதியதாக) தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.75 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

11) கடலூர் பெருநகராட்சி தேவனாம்பட்டினம் சுனாமி குடியிருப்பு பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கப்பட்டு சுமார் 15 வருடங்கள் ஆனதால், அங்குள்ள ஆள் இறங்கு குழிகளில் சாக்கடை மணல் அடைப்பு ஏற்பட்டும், பல ஆள் இறங்கு குழிகளில் பழுதடைந்தும், அதிலிருந்து நீர் உந்தும் நிலையம் வரை உள்ள தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள பழைய பிவிசி 110 எம்.எம். குழாய்கள் பழுதடைந்து உள்ளதால், அதனை அகற்றி விட்டு புதியதாக 250 எம்.எம். பிவிசி குழாய்கள் 360 மீட்டர் நீளத்தில் அடைப்பு ஏற்படாதவாறும், கழிவுநீர் உடனடியாக செல்லும் வகையில் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.17.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், இச்செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

12) கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 1 முதல் 45 வார்டு வரை உள்ள பகுதிகளில் குடிநீர் வழங்கும் மோட்டார்கள் மற்றும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலைய., சாவடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கேப்பர்மலை தலைமை நீரேற்று நிலையம் பகுதிகளில் உள்ள பழுதடைந்த மோட்டார்களை பழுதுநீக்கும் பணி ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 10.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.29% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.07% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி.சேஷாத்திரி கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

13) கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 1 முதல் 45 வார்டு வரை உள்ள புதைவடிகால் திட்டத்திற்கான நீரேற்று நிலையம் மற்றும் உந்து நிலையங்களில் இயங்கி வரும் நீர்மூழ்கி (Non Clog Pumpset) மோட்டார்களை பழுதுநீக்கும் பணி ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 10.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.27% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 1.10% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.27% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி.சேஷாத்திரி கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

14) கடலூர் பெருநகராட்சி வார்டு எண் 1 முதல் 45 வார்டு வரை அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய், பிரதான குழாய், வால்வுகள் மற்றும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையம் ,சாவடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கேப்பர்மலை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள், வால்வுகளில் பழுதுநீக்கும் பணி ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 10.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.18% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.13% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்–1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.18% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி.சேஷாத்திரி கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**15)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் வழங்கும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பகுதியில் குடிநீர் வெளியேற்றும் 400 mm C.I. sluice valve மிகவும் பழுதடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இது பழைய வகையை சேர்ந்த மூடி திறப்பான் என்பதால் இவ்வகை வால்வுகள் உள் வியாபார நிறுவனங்களில் இல்லாததால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து இவ்வகை புதிய வால்வினை பெற்றும் அவ்வால்வுகளுக்குரிய கூடுதலாக DI குழாய்கள், Scour valve மற்றும் இதர பொருட்களை பொருத்தும் பணிக்கு ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 16.04.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.கே.மாரிமுத்து, கடலூர் | 0.12% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்–1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.08% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி.சேஷாத்திரி கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**16)** கடலூர் பெருநகராட்சியில் திருப்பாதிரிப்புலியூர் பேருந்து நிலையம் பின்புறம் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் 400mm C.I. அளவு கொண்ட இரண்டு எண்ணிக்கை சேதமடைந்த குடிநீர் குழாயை மாற்றம் செய்யவும், அந்த இடத்தை சுற்றி 24 x 4 மீட்டர் அளவில் கிராவல் நிரப்ப JCB இயந்திரத்தை கொண்டு மேற்கொள்ளும் பணிக்கு ரூ.3.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**17)** கடலூர் பெருநகராட்சி தேவனாம்பட்டினம் சுனாமி குடியிருப்பு பகுதியில் இருந்து கழிவு நீர் உந்தும் நிலையம் வரை உள்ள தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள பழைய பிவிசி 110 எம்.எம். குழாய்களை மாற்றி 360 மீட்டர் நீளத்திற்கு புதியதாக 250 எம்.எம். பிவிசி குழாய்கள் அமைக்கும் பணி ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 16.04.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.கே.மாரிமுத்து, கடலூர் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.11% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்–1ல் கண்ட திரு.கே.மாரிமுத்து, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.05% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.மாரிமுத்து, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**18)**

கடலூர் பெருநகராட்சியில் திருப்பாப்புலியூர் பேருந்து நிலையம் பின்புறம் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் 400 mm C.I. அளவு கொண்ட இரண்டு எண்ணிக்கை சேதமடைந்த குடிநீர் குழாயை மாற்றம் செய்யவும், அந்த இடத்தை சுற்றி 23 x 4 மீட்டர் அளவில் கிராவல் நிரப்பு JCB இயந்திரத்தை கொண்டு மேற்கொள்ளும் பணி ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 16.04.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.43 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.கே.மாரிமுத்து, கடலூர் | 0.52% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்–1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.43% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி.சேஷாத்திரி கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**19)**

கடலூர் பெருநகராட்சி வன்னியர்பாளையம் –தேவனாம்பட்டினம் சாலையில் 450 mm D.I. K9 பாதாள சாக்கடை குழாய், கடலூர் துறைமுகம் சாலையில் மருத்துவமனை அருகில் 160 எம்.எம். உள்ள பிரதான கழிவுநீர் குழாய் 10 மீட்டர் நீளத்திற்கு புதியதாக மாற்றவும், மேலும் புதுப்பாளையம் இரட்டைப் பிள்ளையார் கோயில் தெருவின் சந்திப்பில் 250அஅ பாதாள சாக்கடை குழாய் (UPVC pipe) மாற்றி அமைக்கும் பணி ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 16.04.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில், பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்ட விவரப்படி உள்ளது.

<table>
<tr><td></td><td>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு விகிதத்திற்கு</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.சேஷாத்திரி, கடலூர்</td><td>0.03 % மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.மாரிமுத்து, கடலூர்</td><td>0.07% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்–1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (003% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி.சேஷாத்திரி கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
</td></tr>
<tr><td>அ.கு.</td><td>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>20)</td><td> கடலூர் பெருநகராட்சி ஆண்டுக் குத்தகை இனம் எண் 8 திருப்பாதிரிப்புலியூர் ஆடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்க 04.08.2018 முதல் 31.03.2019 வரையிலான காலத்திற்கு உரிமம் வழங்கப்பட்டது. குத்தகைதாரர் ஆடு அறுக்கும் இடத்தில் அடிப்டை வசதிகள் ஏதும் இல்லாததாலும், ஆடு அறுக்கும் இறைச்சி கடைக்காரர்கள் வெளி இடங்களில் ஆடு அறுப்பதால், தமக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்றும், தன்னால் குத்தகை தொகை செலுத்த இயலவில்லை என்றும் கூறியதால், அடிப்படை வசதி செய்து தர இவ்வலுவலக இதே எண்ணிட்ட 13.03.2020 அன்று நகராட்சி பொறியாளருக்கு குறிப்பு வழங்கப்பட்டதனை தொடர்ந்து இந்நகராட்சி பொறியாளர் தனது 26.03.2020ம் தேதிய குறிப்பில் மேற்கண்ட இடத்தில் மராமத்தின்றி பயன்படுத்த முடியாத நிலையில் கீலமாக உள்ளது என்றும், இக்கட்டிடத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர கதவு, சன்னல்கள், மின் சாதனப் பொருட்கள், பூச்சு பணிகள், வண்ணப் பூச்சு பணிகள் , டைல்ஸ், கிரானைட் பணிகள் அனைத்தும் (மராமத்து பணிகள்) செய்யப்பட வேண்டும் என்றும், இப்பணிகளை செய்தால் மட்டுமே இவ்வதைக் கூடத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரமுடியும் என்பதால் இப்பணி மேற்கொள்ள இவ்வலுவலுக ந.க. எண் 3320/ 20/இ1 எண்ணிட்ட 26.03.2020ம் தேதிய கடிதம் வாயிலாக நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது என தெரிவித்து அதன் நகல் சமர்ப்பித்துள்ளார்.
இக்குத்தகை இனத்தை அடிப்படை பணிகள் செய்து முடிக்கும் வரை 01.04.2020 முதல் இக்குத்தகையை ரத்து செய்யலாம். குத்தகைதாரர் செலுத்த வேண்டிய வைப்புத் தொகையில் அன்னார் செலுத்த வேண்டிய குத்தகை தொகையை ஈடு செய்து கொள்ளலாம். மன்றத்தின் அனுமதி கோரி மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு. </td></tr>
<tr><td>அ.கு.</td><td>அனுமதிக்கலாம். (10933/2017/அ2)</td></tr>
<tr><td>21)</td><td>கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22 திருப்பாதிரிப்புலியூர் அண்ணா பாலத்தில் 150 Watts LED விளக்குகள் 18 எண்கள் மற்றும் தெரு விளக்கு street light timer switch வாங்கி பொருத்தும் பணி ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 20.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்ட விபரப்படி உள்ளது.</td></tr>
</table>

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திருமதி.ஆர்.நவநீதம், கடலூர் | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | மகாலெட்சுமி எண்டர்பிரைசஸ், செங்கற்பட்டு | 0.55 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்–1ல் கண்ட திருமதி.ஆர்.நவநீதம், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (008 % மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஆர்.நவநீதம், கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

22) கடலூர் பெருநகராட்சி 2019–2020ம் ஆண்டுக்கு வரி மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு பதிவேடுகள் பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்து தணிக்கைக்கு உட்படுத்த வேண்டியுள்ளதாலும், மேலும் 2020–2021 ம் ஆண்டுக்கான வரி மற்றும் வரியில்லா இனங்களின் கேட்பு அறிவிப்புகள் மற்றும் வருவாய் உதவியாளர்களின் கையேடுகள் பிரிண்ட் எடுத்து Spiral பைண்டிங் செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம். (3195/2020/ அ1)

23) கடலூர் பெருநகராட்சி, பொதுசுகாதாரப் பிரிவில் TN 31 F 0753 டிராக்டர் மற்றும் TN 31 AA 7323 டிரெய்லர் என்ற வாகனத்தின் தகுதிச்சான்று காலம் 25.04.2020ல் முடிவடைகிறது. மேற்படி வாகனத்தின் தகுதிச்சான்றை புதுப்பிக்க வேண்டிய பழுது நீக்கம் செய்ய உள்ளதால், உள்ளூர் பணிமனையில் பழுது நீக்கத்திற்கான உத்தேச மதிப்பீடு வாகன பொறுப்பு அலுவலர் / சுகாதார ஆய்வர் அவர்களின் சான்றின்படி, கணக்கிடப்பட்டுள்ள உத்தேச செலவினம் ரூ.1,50,000– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)னை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு. அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். (3358/2020/ எச் 2)

24) கடலூர் பெருநகராட்சி, பொதுசுகாதாரப் பிரிவில் காம்பாக்ட் லாரி TN 31 BD 9025 என்ற வாகனத்தின் தகுதிச்சான்று காலம் 06.05.2020ல் முடிவடைகிறது. மேற்படி வாகனத்தின் தகுதிச்சான்றை புதுப்பிக்க வேண்டிய பழுது நீக்கம் செய்ய உள்ளதால், உள்ளூர் பணிமனையில் பழுது நீக்கத்திற்கான உத்தேச மதிப்பீடு வாகன பொறுப்பு அலுவலர் / சுகாதார ஆய்வர் அவர்களின் சான்றின்படி, கணக்கிடப்பட்டுள்ள உத்தேச செலவினம் ரூ.1,50,000– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)னை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.கு. அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். (3357/2020/ எச் 2)

25) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.3) அரசாணை நிலை எண் 101, நாள் 30.04.1997ன் வழிகாட்டுதல் மற்றும் அளவுகோலின்படி கடலூர் பெருருகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க. எண் 25580/ 2015/ பி3 நாள் 07.01.2010 எண்ணிட்ட செயல்முறையின்படி 3 ஆண்டுகளுக்கு 107 துப்புரவு பணியாளர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியில் தற்காலிகமாக ஈடுபடுத்திக்

கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த எஸ்.வி.டி. கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் என்ற நிறுவனம் மூலம் 04.03.2016 முதல் 107 பணியாளர்கள் துப்புரவு பணியில் ஈடுபடுத்த உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களின் ஒப்பந்தக்காலம் 28.02.2019 உடன் முடிவடைகிறது. வடகிழக்கு பருவமழை காரணமாக நகரில் தேங்கியுள்ள மழைநீர் மற்றும் கழிவுநீர், டெங்கு காய்ச்சல் மூலம் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க குப்பைகளையும் பொதுமக்களின் புகார்களுக்கு இடமின்றி அகற்ற வேண்டியுள்ளது.

மேலும் 11.10.2018ம் தேதி நடைபெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் (கடலூர்) ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி செய்து வரும் ஒப்பந்ததாரர் எஸ்.வி.டி. கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் என்ற நிறுவனம் மூலம் கூடுதலாக 50 பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணி செய்ய தெரிவிக்கப்பட்டு, அதன்படி நகர்மன்ற தீர்மானம் 2319, நாள் 22.10.18ல் ஒப்புதல் பெறப்பட்டு, 157 பணியாளர்களைக் கொண்டு பணி செய்து வரப்பட்டது.

மேற்படி ஒப்பந்தம் 28.02.2019–டன் முடிவடைந்து, புதிய ஒப்பந்தப்புள்ளி கோரிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி ந.க.எண் 538/2019/எச் 1 என்ற கோப்பின் மூலம் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. புதிய ஒப்பந்ததாரர் முடிவு செய்யும் வரை தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு 2020 மார்ச், ஏப்ரல், மற்றும் மே மாதங்கள் வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் தற்போது பரவி வரும் கெரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவசரம் அவசியம் கருதி , நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் இருந்து நிர்வாக அனுமதி வரும் வரையில், பொது சுகாதாரம் அவசியம் அவசரம் கருதி 2020 ஜுன், ஜீலை ஆகிய இரண்டு மாதங்களுக்கு எஸ்.வி.டி. கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் என்ற தனியார் நிறுவனம் மூலம் துப்புரவு பணியினை செய்திட கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்தினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம். (10570/ 16/எச் 1)

26) கடலூர் பெருநகராட்சி, திருப்பாதிரிப்புலியூர் நூற்றாண்டு பான்பரி மார்க்கெட் வளாகத்தில் உள்ள கீழ்க்கண்ட கடைகளை தன்னால் தொடர்ந்து வியாபாரம் செய்ய இயலவில்லை எனத் தெரிவித்து கடையை திரும்ப நகராட்சியிடம் ஒப்படைக்கப்படுவதாக தனது 30.10.2019ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார் .

| வ. எ. | வரி விதிப்பு எண் | கடை எண் | உரிமைதாரர் பெயர் | 31.10.2019 வரை வாடகை பாக்கி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை | GST | |
| 1 | 093/60 | 10 | கே.கிருஷ்ணசாமி | 14299 | 26154 | 171453 |
| 2 | 093/61 | 11 | கே.கிருஷ்ணசாமி | 14299 | 26154 | 171453 |
| 3 | 093/62 | 12 | கே.கிருஷ்ணசாமி | 14299 | 26154 | 171453 |
| | | | மொத்தம் | 435897 | 78462 | 514359 |
| | | | | | 21000 ஒ 3 | (-) 63000 |

மீதம் வசூலிக்கப்பட வேண்டியது **451359**

மேற்கண்ட 3 கடைகளையும் பொது ஏலத்தில் விடவும், குத்தகைதாரர் செலுத்த வேண்டிய வாடகை பாக்கியை சட்டப்படி வசூலிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. அ) அனுமதிக்கலாம்
ஆ) அவசர அவசியம் கருதி நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். (8778/19/அ2)

27) கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் சிறிய ஜெட்ராடிங் வாகனம் TN 31 CA 7578 பதிவெண் கொண்ட TATA ACE–க்கு 2020–2021 உள்ள ஆயுள் காப்பீட்டை (இன்சூரன்ஸ்) புதுப்பிக்க ஆகும் செலவினம் ரூ.20940/– ஐ நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

28) கடலூர் பெருநகராட்சிக்கு இலகுரக ஓட்டுநர் பணிக்காக ஆறுமாத காலத்திற்கு தற்காலிகமாக பணி அமர்த்திட பணியாளர் 1 (ஒன்று) நபர் விநியோகம் செய்யும் பணி ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 07.05.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 0.17 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.கே.மாரிமுத்து, கடலூர் | 0.51 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்–1ல் கண்ட திரு.டி.சேஷாத்திரி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.17% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.டி.சேஷாத்திரி கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலைஉத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலைஉத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

29) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திரு.விஸ்வநாதன், த/பெ.சுப்பிரமணியம், 42 சுதர்சனம் தெரு, மஞ்சக்குப்பம், கடலூர் என்பவர் தன்னுடைய வீட்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வலியினை உயர்வு செய்ததை ஆட்சேபித்து (சொத்து வரி எண் 093/010/00915) கடலூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் O.S.No. 145-2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.சச்சிதானந்தம் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு. அனுமதிக்கலாம். (8128/ 2018/ அ4)

30) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திரு.கே.பி.முருகன் மற்றும் திருமதி.அமுதா, 1 ஏ சண்முகம் பிள்ளை தெரு, வில்வராயநத்தம், கடலூர் என்பவர் தன்னுடைய வீட்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வலியினை உயர்வு செய்ததை ஆட்சேபித்து (சொத்து வரி எண் 093/5908, 093/5909

| | |
|---|---|
| | மற்றும் 093/5910 ) கடலூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் O.S.No. 11/2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.சச்சிதானந்தம் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். (1445 / 2019/ அ4) |
| **31)** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திருமதி.எம்.ராதா, க/பெ.மணி, கதவு எண் 16, வேணுகோபாலபுரம் மெயின் ரோடு, மஞ்சக்குப்பம், கடலூர் என்பவர் தன்னுடைய வீட்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வலியினை உயர்வு செய்ததை ஆட்சேபித்து (சொத்து வரி எண் 093/010/00573) கடலூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் O.S.No. 59/2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.சச்சிதானந்தம் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். (2724 / 2019/ அ4) |
| **32)** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திரு.ஜி.சந்திரன், த/பெ.கணேசன், 6ஏ, ராமதாஸ் நாயுடு தெரு, புதுப்பாளையம், கடலூர் என்பவர் தன்னுடைய வீட்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வலியினை உயர்வு செய்ததை ஆட்சேபித்து (சொத்து வரி எண் 093/228430 தரைதளம், 093/228431 முதல் தளம் மற்றும் 093/228432 இரண்டாம் தளம்), கடலூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் O.S.No. 119/2019, I.A.No.278/ 2019 ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.சச்சிதானந்தம் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். (7938/ 2019/ அ4) |
| **33)** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திரு.சேகர், த/பெ.சுப்பிரமணியம், 106, நேதாஜி ரோடு, மஞ்சக்குப்பம், கடலூர் என்பவர் தன்னுடைய வீட்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வலியினை உயர்வு செய்ததை ஆட்சேபித்து (சொத்து வரி எண் 093/010/00927, 093/010/00928, 093/010/00929, 093/010/00930, 093/010/00931 மற்றும் 093/010/00932), கடலூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் O.S.No. 191/2019, I.A.No.357/ 2019 ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.சச்சிதானந்தம் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். (9962/ 2019/ அ4) |
| **34)** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட திருமதி.ஹேமலதா, க/பெ.சதிஷ்குமார்சிங், நெ.5 ஜெகதேவ் நகர், மஞ்சக்குப்பம், கடலூர் என்பவர் தன்னுடைய வீட்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வலியினை உயர்வு செய்ததை ஆட்சேபித்து (சொத்து வரி எண் 093/006/00349) கடலூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் O.S.No. 61-2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார். |

| | |
|---|---|
| | மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.சச்சிதானந்தம் அவர்கள் வழக்கினை ஏற்று நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | அனுமதிக்கலாம். **(2723/ 2019/ அ4)** |
| **35)** | கடலூர் பெருநகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் 31 BB 6780 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற வேண்டி, பழுது நீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைவான விலைப்புள்ளி அளித்த சரவணா ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வஷழங்குவதற்கும், அதற்கான செலவினம் ரூ.**1,35,700/–** (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரத்து எழுழநூறு மட்டும்) ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். **(1771/ 2020/ எச்2 )** |

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 29/05/2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.